# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • மார்ச் 20, 2021

Weekly E-paper • March 20, 2021




# மகிழ்ச்சி நல்லது, மயக்கம் கூடாது!

-சுப. வீரபாண்டியன்

## தேர்தலின் நாயகன்

சாரதாதேவி

## மாநில உரிமை...

தலையங்கம்

## 2021 தேர்தல் ஆரிய திராவிடப் போர்

தோழர் வெண்மணி நேர்காணல்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • மார்ச் 20, 2021

Weekly E-paper • March 20, 2021


# மகிழ்ச்சி நல்லது, மயக்கம் கூடாது!

சுப.வீரபாண்டியன்



எதிர்க்கட்சி ஊடகங்கள் உள்பட அனைத்து ஊடகங்களும் வரும் சட்டமன்றத் தேர்தலில், திமுக கூட்டணி பெரும் வெற்றிபெறும் என்ற கருத்துக் கணிப்பை வெளியிட்டுள்ளன. கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமின்றி, பொதுவான ஜனநாயகச் சக்திகளுக்கும் இச்செய்தி மகிழ்ச்சியைத் தந்துள்ளது. வரப்போகும் விடியலுக்கான ஒரு விடிவெள்ளியாக இதனை நாம் பார்க்கலாம்.

அதே நேரம், கருத்துக் கணிப்புகள் பற்றிய சில எச்சரிக்கைகளும் நமக்குத் தேவைப்படுகின்றன. கருத்துக் கணிப்புகளைத் தாண்டி நமக்கே இன்று மக்களின் ஆதரவு திமுக பக்கம் இருப்பதை உணர முடிகிறது. வெற்றி உறுதிதான். அதனால் மகிழ்ச்சி நம்மைப் பற்றிக் கொள்வதும் இயற்கைதான். இருந்தாலும் அந்த மகிழ்ச்சி நம்மையறியாமலேயே ஒருவிதமான மயக்கம் ஆகிவிடக் கூடாது.

ஏப்ரல் 6 வரையில் ஓய்வின்றி உழைத்தால் மட்டுமே அந்த வெற்றிக்கனியை முழுமையாக நாம் பெற இயலும். கட்சியின் சார்பில் போட்டியிட வாய்ப்பிழந்தவர்களுக்கு ஒரு வருத்தம் இருக்கும். கட்சிக்குள் சிறு சிக்கல்களும் இருக்கும். அவற்றையெல்லாம் தாண்டி, ஒரு பொது எதிரியை நெஞ்சில் நிறுத்தி உழைக்க வேண்டிய தேர்தல் இது! வெற்றி மயக்கம், மனச் சோர்வு இரண்டுமே நம் இலக்கைச் சிதைக்கும்.

பாஜக இருபது இடங்களில்தானே போட்டியிடுகிறது என்று எண்ணிக் கவனக்குறைவாக இருந்துவிடக் கூடாது. 234 இடங்களிலும் நம்மை எதிர்த்து அவர்கள்தான் வெவ்வேறு பெயர்களில் போட்டியிடுகின்றனர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அதிமுக இன்னொரு பாஜக என்பதை நாம் அறிவோம். மதவெறிக்கு இணையானதே சாதி வெறியும். ஆதலால் பாமக என்பதும் பாஜக தான்! காங்கிரசில் இருந்து பிரிந்த தமிழ் மாநிலக் காங்கிரஸ் கூடத் தன் தேர்தல் அறிக்கையில், கோயில்களைத் தனியாரிடம் கொடுத்துவிட வேண்டும் என்கிறது. ஆக, எல்லாமே பாஜக கட்சியின் மாற்று வடிவங்கள்தான்!

மக்கள் நீதி மய்யம், நாம் தமிழர், அமமுக போன்ற உதிரிக் கட்சிகளும் திமுகவைதான் எதிர்க்கின்றன என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. ம நீ ம கட்சி, தேர்தல் அறிக்கையில், நீட் என்பதற்குப் பதிலாக, சீட் என்கிறது. ஓரிடத்தில் இருமொழிக் கொள்கை தொடரும் என்று கூறிவிட்டு, இன்னொரு இடத்தில், மும்மொழிக்கொள்கை அமலாகும் என்கிறது. எனவே எல்லாக் கட்சிகளும் வெவ்வேறு பெயர்களில் ஒரே முகத்ததைக் காட்டுகின்றன.

சுருக்கமாய்ச் சொன்னால், களத்தில் நிற்பது, சமூக நீதியும், மனு நீதியும்தான். சமூக நீதிச் சமரில் விலகி நிற்பவர்களும் கூட மறைமுகமாக மனுநீதிக்குத் துணை போகின்றனர் என்றே பொருள்!

வாருங்கள் தோழர்களே! களம் காண்போம், சமூக நீதியை அரியணையில் அமர்த்துவோம்!

# தேர்தலின் நாயகன்

# தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை

**சாரதாதேவி**

2021 சட்டமன்ற தேர்தலைப் பொறுத்தவரை, எந்தக் கட்சியும் போட்டி போட முடியாத, பல கட்சிகள் நெருங்கக் கூட முடியாத, சில கட்சிகள் காப்பி அடிக்க நினைத்து சூடு போட்டுக்கொண்ட, எல்லாக் கட்சிகளும் பொறாமைப்படும் ஒரே கதாநாயகன் திமுகவின் தேர்தல் அறிக்கை மட்டுமே!

இந்த மாதம் 7ஆம் நாள் திருச்சியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலேயே தி.மு.க வின் தலைவர் தளபதி ஸ்டாலின் அதற்கான முன்னோட்டத்தை "ஸ்டாலினின் 7 உறுதிமொழிகள்" என அறிவித்தார். கீழே கொடுக்கப்பட்டுள்ள அந்த உறுதிகள் மக்களாட்சியின் கனவை மெய்ப்பிப்பவையாக உள்ளன.

1.வளரும் வாய்ப்புகள்; வளமான தமிழ்நாடு

2.மகசூல் பெருக்கம்; மகிழும் விவசாயி

3.குடிமக்கள் அனைவருக்கும் குறையாத தண்ணீர்

4.அனைவருக்கும் உயர்தரக் கல்வி மற்றும் உயர்ந்த மருத்துவம்

5.அனைவருக்கும் அனைத்துமான தமிழகம்

6.எழில்மிகு மாநகரங்களின் மாநிலம்

7.உயர்தர ஊரகக் கட்டமைப்பு; உயர்ந்த வாழ்க்கைத் தரம்

ஒரு மாநிலத்தின் வளர்ச்சியை, அதன் மக்களின் வாழ்வாதாரத்தை, வாய்ப்புகளை, உரிமைகளைப் பற்றித் தொலைநோக்குப் பார்வை கொண்ட ஒரு குழுவை நியமித்து, அதன் சாத்தியப்பாடுகளைக் கவனத்தில் வைத்து சொல்வதையெல்லாம் செய்யவேண்டும் என்ற தன்னுறுதி வெளிப்பட தேர்தல் அறிக்கையைத் தயார் செய்ததில் ஸ்டாலின் தான் ஒரு சரியான தலைமை என்று நிரூபித்துக் காட்டியுள்ளார்.

மார்ச் 13ஆம் நாள் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கை, 128 பக்கங்கள், 63 தலைப்புகள், ஐநூற்று ஐந்து வாக்குறுதிகள் என தமிழக, தமிழ் மக்களின் நலன் காக்கும் போராளியாக மிளிர்கிறது!

கொரோனாவால் வாழ்வாதரங்கள் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்துக்கும் உடனடியாக ரூ.4000/-, குடும்பத்தலைவிகளுக்கு ரூ.1000/-, மின் கட்டணம், பெண்களுக்கானப் பேருந்துக் கட்டணம், பெட்ரோல், டீசல், எரிவாயு என அனைத்திலும் சலுகைகள் வழங்குவதன் மூலம் உடனடியாக ஒவ்வொரு குடும்பமும் நிம்மதிப் பெருமூச்சு விட வழி செய்துள்ளார். எத்தனை ஆயிரங்களை ஆளுங்கட்சியினர் கைகளில், அறிக்கைகளில், வெற்றிலைகளில் மடித்துக் கொடுத்தாலும் மாதாமாதம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் வரிக் சலுகைகளின் வழி சேமித்துக் கொடுக்கும் ரூ.3500/-க்கு ஈடாகுமா என்று எண்ணிப் பார்க்கும் வகையில் பல அடிகள் முன்னேற்றத்தை இந்த வாக்குறுதி தரும்.

1967ல் தி.மு.கழகம் அறிவித்த அரிசியை மலிவு விலையில் கொடுப்போம் என்ற வாக்குறுதி தான் கழகத்தின் எதிர்காலத்தை மட்டுமல்ல, தமிழகத்தின் எதிர்காலத்தையும் புரட்டிப் போட்ட வாக்குறுதி! சோற்றுப்பாட்டைத் தீர்த்து வைத்ததன் மூலமே நம் மக்கள் அடுத்த வளர்ச்சிக் கட்டத்திற்குச் செல்லும் இலகுவை அடைந்தனர். கல்வி வாயிலை அடைய அவர்களுக்குப் பேருதவி செய்த மாபெரும் புரட்சி அது என்றும் பொருளாதார அறிஞர் ஜெயரஞ்சன் அவர்கள் சொல்கிறார்.

நடுவண் அரசும் அதன் அடிமை மாநில அரசும் கல்வி உதவித் தொகைகளைக் குறைத்தும், இல்லாமலும் செய்து கொண்டு வரும் இவ்வேளையில், தி.மு.கழகம் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மாணவர்களுக்கான உதவித் தொகையை இரட்டிப்பாக்கி அறிவித்துள்ளது. ஏழை மாணாக்கரும், அவர்தம் கல்வி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வரும் கல்வியாளர்களும் கொண்டாடும் வாக்குறுதியாக இது அமைந்துள்ளது.

பல்லாண்டுகாலமாக நடைபெற்று வரும்போதிலும் அண்மைக்காலமாகச் சமூக ஊடகங்களில் பெருங்கவனம் பெற்று வந்த அவலமான பாதாளச் சாக்கடைப் பணியாளர்களின் இறப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அப்பணி உடனடியாக இயந்திரமயமாக்கப்படும் என்ற அறிவிப்பும் அப்பணியாளர்களின் குடும்பத்தினருக்கும் அதற்காக உழைத்த பல்வேறு சமூகப் பணியாளர்களுக்கும் வயிற்றில் பால் வார்த்த அறிவிப்பாகியுள்ளது.

பசுமைப் பரப்பளவைக் கூடுதலாக்கி 25% சதவிகிதமாக உயர்த்துவது, குறைந்து வரும் நிகர பயிரிடும் பரப்பை 11.75 லட்சம் ஹெக்டேர் கூட்டுவது என்ற அறிவிப்பு உழவுத் தொழிலின் மீது சிறுக சிறுக உழவர்கள் இழக்கும் நம்பிக்கையை மீட்டுத்தரும். புதியவர்களை அத்தொழில் நோக்கியும் திருப்பும்.

இந்துக் கோயில்களுக்கு ரூ.1000/- கோடி என்ற அறிவிப்பு, இந்த மண்ணின் சைவ, வைணவ, நாட்டார் தெய்வ வழிபாட்டினருக்கு ஒரு பெரும் புத்துணர்வைத் தரும். தேவாலயங்களுக்கும் மசூதிகளுக்கும் கூட அறிவிக்கப்பட்டிருக்கும் ரூ.200/- கோடி, அரசு மதச் சார்பற்றதும், அனைத்து மதத்தினருக்குமானது என்ற நம்பிக்கையை விதைக்கும் ஒரு அருமையான அறிவிப்பு!

ரூ.35 லட்சம் கோடியை இலக்காகக் கொண்டப் பொருளாதார வளர்ச்சி, ஆண்டுக்கு 10 லட்சம் புதிய வேலை வாய்ப்புகள், 5% குறைவான நகர்ப்புற குடிசைகள், ஊரகப்பகுதிகளில் 85% கான்கிரீட் வீடுகள் என அடுத்தப் பத்தாண்டுகளில் சாதிக்க முடியும் என்று நம்புபவற்றை தேர்தல் அறிக்கையாகத் தந்திருக்கிறார்கள். தேர்தல் அறிக்கையின் வாக்குறுதிகளை நிறைவேற்ற 'புதிய திட்டங்கள் செயலாக்க அமைச்சகம்' உருவாக்கப்படும் என்று அறிவித்திருப்பதே இந்த வாக்குறுதிகள் எவ்வளவு தீவிரமாகச் செயல்படுத்தப்படும் என்பதை மக்களுக்கு உணர்த்துகிறது.

ஸ்டாலின் இன்று மாபெரும் தலைவராக மக்களிடை உயர்ந்து நிற்கிறார். அதற்கு அவருடைய அயரா உழைப்பும், கண்டிப்பும், உறுதியும், மக்கள் மீதான அளவற்ற அன்புமே காரணம். அதுவே தேர்தல் அறிக்கயில் அனைவருக்கும் அனைத்துமான தமிழகம் என்ற உறுதி முழக்கமாக இடம்பெறுகிறது.

ஆந்திர முதல்வர் ஜெகன்மோகன் சொல்வதைப் போல தி.மு.க.வின் 2021 தேர்தல் அறிக்கை இந்திய நாட்டுக்கான அறிக்கையாக ஒளிவீசுகிறது. நாட்டையே ஆளும் தகுதி படைத்தவராக தி.மு.க. தலைவர் ஸ்டாலின் நம்பிக்கையளிக்கிறார்!




# வேட்பாளர்களுடன்...

## ஆலந்தூர்



## குறிஞ்சிப்பாடி






தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## மாநில உரிமை...

மத்திய அரசு கொண்டு வந்துள்ள குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை நீக்க வலியுறுத்துவோம் என்று அ.தி.மு.க தேர்தல் அறிக்கை சொல்கிறது.

மக்களவையில் இச்சட்டம் நிறைவேறி மாநிலங்களவையில் வைத்தபோது இச்சட்டத் திருத்த மசோதாவை வலிமையாக ஆதரித்த கட்சி அதிமுக. அவையில் வாக்கெடுப்பின் போது இச்சட்டத்திற்கு எதிராக 105 வாக்குகளும், ஆதரவாக 114 வாக்குகளும் என்று இருந்த போது, அதிமுகவின் 11 உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்து 125 வாக்குகளில் நிறைவேற வலிமை சேர்த்து இம்மசோதா சட்ட வடிவம்பெறச் செய்ததே அதிமுகதான். இப்பொழுது அறிக்கை விடுகிறார்கள். சட்டத்தை ரத்து செய்ய வலியுறுத்துவார்களாம். ஆனால் அவர்களின் கூட்டணிக் கட்சியான பா.ஜ.கவின் தமிழகப் பொறுப்பாளர் ரவி உடனே மறுத்துவிட்டார்.

வேதாரண்யத்தில் தேர்தல் பரப்புரையின் போது எடப்பாடியார் சொல்கிறார், ஜெயலலிதா எதிர்த்த நீட் தேர்வை அதிமுகவும் எதிர்க்கிறதாம். நீதிமன்றத்தின் மூலம் தமிழகத்தில் நீட் நுழைந்து விட்டதாம். அதை நீக்க இவர்கள் வலியுறுத்துவார்களாம்.

நாடாளுமன்றத்தில் நீட் தேர்வை வலிமையாக அன்று ஆதரித்துப் பேசிய அ.தி.முக உறுப்பினர், ஓ.பன்னீர்செல்வத்தின் மகன் ரவீந்திரன் என்பதை மறந்து அல்லது மறைத்து விட்டுப் பேசுகிறார் எடப்பாடி, மக்களை மடையர் என்று நினைத்துக் கொண்டு.

பா.ஜ.க ஒரு மதவாதக் கட்சி என்பது உலகறிந்த செய்தி. அதைப் பின்னிருந்து இயக்குவது ஆர்.எஸ்.எஸ் என்ற இந்து மதவெறி அமைப்பு என்பது மக்கள் அறிந்த செய்தி. குடியுரிமைச் சட்டத்திற்கும், நீட் தேர்வுக்கும் பின்னால் மதம் கோலோச்சுகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. இதற்குத் துணையாக, பா.ஜ.கவின் அடிமையாக இருக்கிறது அதிமுக அரசு.

குடியுரிமைச் சட்டம், நீட் தேர்வை மிகக் கடுமையாக நாடாளுமன்றத்தில் எதிர்த்தவர்கள் தி.மு.க உறுப்பினர்கள். திருச்சி சிவா உள்ளிட்ட திமுக மாநிலங்களவை உறுப்பினர்களின் உரைகள் இதற்கு ஒரு சான்று.

சுருக்கமாகச் சொன்னால் பா.ஜ.கவிடம் அதிமுக அடகு வைத்த மாநில உரிமையை மீட்டெடுக்கப் போராடிக் கொண்டிருக்கிறது, தி.மு.கழகம்.

மாநில உரிமை என்பது மக்களின் உரிமை. இது உரிமைப் போராட்டம். இந்தப் பேராட்டத்தில் இலை உதிர வேண்டும், உதயசூரியன் உதிக்க வேண்டும்.

வாக்களிப்போம் "உதயசூரியன்" சின்னத்தில்; ஆட்சியமைப்போம், தளபதி ஸ்டாலின் தலைமையில்.

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com
மின் அஞ்சல்: karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

# 2021 தேர்தல் ஆரிய திராவிடப் போர்

## திடாவிடத் தமிழர் கட்சித் தலைவர் வெண்மணி

**மா.உதயகுமார்: 1. அதிமுகவிற்கு எதிரான அலை, மக்களிடம் பெரிதாக இல்லை என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. இதில் எந்த அளவிற்கு உண்மை இருக்கிறது?**

**வெண்மணி:** தொடர்ந்து ஏழு ஆண்டுகள் மத்திய அரசிற்கு எதிரான அலையை, சமூகநீதி சார்ந்த இயக்கங்கள் உருவாக்கியிருக்கின்றன. அதேபோல மத்திய அரசின் தமிழர் விரோத, சமூகநீதிக்கு எதிரானத் திட்டங்களைத் தங்குதடையின்றிச் செயல்படுத்திட மாநில அரசு வழி வகுக்கிறது என்பதைச் சரியாக நாம் மக்கள் மத்தியில் கொண்டு செல்லவில்லை என்று கருதுகிறேன். மத்திய அரசை எதிர்த்த அளவிற்கு நாம் மாநில அரசை எதிர்க்க வில்லை. இது வெளிப்பார்வைக்கு மாநில அரசு எதிர்ப்பு நிலை இல்லை என்பது போலத் தோன்றும். இது அடிப்படையில் தவறான ஒன்றாகும். பாஜக கூட ஏழு ஆண்டுகளாகத்தான் ஆட்சியில் இருக்கிறது. ஆனால் அதிமுக 10 ஆண்டுகளாகத் தமிழகத்தில் ஆட்சியில் இருக்கிறது. இந்த 10 ஆண்டுகளில் அதிமுகவினரின் செயல்பாடுகள், கோமாளித்தனமானப் பேச்சுகள், தரமற்ற செயல்கள், பணம் கொடுத்து மக்களைச் சரிசய்து விடலாம் என்கிற இழிவான எண்ணம் இவற்றையெல்லாம் மக்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். மத்திய அரசின் மீதான அதே அளவு எதிர்ப்பு மாநில அரசின் மீதும் இருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால் மாநில அரசு என ஒன்று இருக்கிறதா என்பதே கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது. மத்தியிலும் பா.ஜ.க, மாநிலத்திலும் பா.ஜ.க ஆட்சியாகத்தான் இருக்கிறது. எந்த வேறுபாடும் இல்லை. புதிய கல்விக் கொள்கை சட்டமாக இன்னும் வராத சூழலில், அதன் சாராம்சங்களை செங்கோட்டையன் இங்கு நடைமுறைப்படுத்துகிறார். எனவே பாஜகவுக்கும் அதிமுகவுக்கும் எந்த வேறுபாடும் இல்லை.

அதிமுகவின் தேர்தல் பிரச்சாரங்களில் மக்கள் அவர்கள் பேச்சைக் கேட்காமல் கலைந்து செல்வதைப் பார்க்கிறோம். இடஒதுக்கீட்டுப் பிரச்சனையில் வன்னியர் சமூகமும் கள்ளர் சமூகமும் அதிமுகவின் மேல் அதிருப்தியில் இருக்கின்றனர். அதேபோல் டிஎன்பிஎஸ்சி மூலம் வட மாநிலத்தைச் சார்ந்தவர்கள் விண்ணப்பித்து இங்கு பணிபுரியலாம் என்று எடப்பாடி பழனிச்சாமி கையெழுத்துப் போடுகிறார். இதனையெல்லாம், படித்துவிட்டு வேலையில்லாமல் தவிக்கும் இளைஞர்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

இவர்களை மனிதப் புனிதர்கள் போல சித்தரிப்பதற்காக இது போன்ற சொல்லாடல்கள் திட்டமிட்டுப் பரப்பப்படுகின்றன. ஆகவே மத்திய அரசின் மீது இருப்பதை விட அதிகமான எதிர்ப்புணர்வு இபிஎஸ்-ஓபிஎஸ் மீதும் இருப்பதாகவே நான் பார்க்கிறேன்.

**மா.உதயகுமார்: 2. மக்களிடம் நாம் இன்னும் அதிகமாகக் கொண்டு செல்ல வேண்டிய அல்லது விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய செய்திகளாக எவற்றைக் கருதுகிறீர்கள்?**

**வெண்மணி:** மக்களிடம் ஒரு அவநம்பிக்கை இருப்பதைப் பார்க்க முடிகிறது. கடந்த காலங்களில் திமுக மீது திட்டமிட்டுப் பரப்பப்பட்டப் பொய் பிரச்சாரங்கள் சென்று சேர்ந்த அளவிற்கு, திமுகவின் சாதனைகள் சென்று சேரவில்லை. திமுகழகத்தின் முன்மாதிரியானத் திட்டங்களைக் கொண்டு சேர்ப்பதில் பின்னடைவு ஏற்பட்டு விட்டது.



நம்மைப் போன்ற திராவிட இயக்கங்கள் கலைஞர் ஆட்சியின் சாதனைகளைப் பட்டியலிடுகிறோம். திமுகவின் ஒரு சிலத் தலைவர்கள்தான் இதை மக்களிடம் கொண்டு சேர்க்கிறார்கள். தமிழகத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாக இருக்கிற அனைத்துத் திட்டங்களையும் கொண்டு வந்தது திமுகவாக இருக்கிறது. செய்தவர் கலைஞராக இருக்கிறார். இந்தச் செய்திகளை எல்லாம் நாம் பெரிய அளவில் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

அதேபோல் மதவெறி சாதிவெறி இந்த இரண்டும் அதிகாரத்தோடு கைகோர்த்து வருகின்றன. மற்ற எல்லாத் தேர்தல்களை விடவும் 2021 தேர்தலை மிகவும் ஆபத்தானத் தேர்தலாகப் பார்க்கவேண்டியிருக்கிறது. இது சமூக நீதிக்கும் மனு(அ)நீதிக்கும் இடையிலான போர், ஆரிய திராவிடப் போர் என்பதையெல்லாம் நாம் மக்களிடம் தோலுரித்துக் காட்ட வேண்டும். அதேபோல் திமுகழகம் வெளியிட்டிருக்கும் தேர்தல் அறிக்கை என்பதும் பலமானது. அதுவும் மக்களிடம் பரவலாகக் கொண்டு செல்லப்பட வேண்டும்.

**மா.உதயகுமார்: 3. ஐஐடி ஐஐஎம் போன்ற நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் இடஒதுக்கீடு இல்லாமல் இருப்பது பற்றிய தரவுகள் அண்மையில் வெளியாகின. இது பற்றியத் தங்களுடையக் கருத்து.**

**வெண்மணி:** இந்தியச் சமூகம் என்பது சாதியச் சமூகம். அதிலும் குறிப்பாகப் பார்ப்பன சமூகத்தினர் உயர் நிலையில் இருக்கக்கூடிய சமூகமாகத்தான் இந்தச் சமூகம் இருக்கிறது. புரட்சியாளர் அம்பேத்கர், "பிறப்பின் அடிப்படையில் மனிதர்களைப் பிரிக்கும் சமூக வரலாறு கொண்டதுதான் இந்தியா" என்று சொல்லுவார். அந்த அடிப்படையில் பார்த்தால் பார்ப்பன மேலாண்மையை உயர்த்திப் பிடிக்கிற ஒரு சமூகமாகத் தான் இந்தியச் சமூகமும் இந்திய அரசும் இருக்கின்றன. ஆகவேதான் இன்று வரை மத்திய அரசின் வேலைவாய்ப்புகளில் கல்வி நிலையங்களில் இடஒதுக்கீடு என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

மண்டல் குழு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு, பிற்படுத்தப்பட்டோருக்கு 27% இடஒதுக்கீடு வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 30 ஆண்டுகள் ஆகியும் 12.5% தான் இடஒதுக்கீடு வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல் பட்டியல் மற்றும் பழங்குடி சமூக மக்களுக்கு 22.5% வழங்கப்பட்டிருக்க வேண்டும். 60 ஆண்டுகள் ஆகியும் அதில் 8% தான் வழங்கப்பட்டிருக்கிறது. இவை சமூக நீதித்துறை வெளியிட்டுள்ள தகவல்களாகும். ஆக 12 + 8, மொத்தம் 20 சதவீதம் போக 80 சதவிகிதத்தைப் பார்ப்பனர்கள் மட்டுமே அனுபவித்திருக்கிறார்கள்.

சமூகநீதி என்றால் என்னவென்று தெரியாதவர்கள் இந்தியா முழுவதும் மக்களவை உறுப்பினர்களாகச் சென்றதே இந்நிலைக்குக் காரணம். சமூகநீதி பற்றிப் பேசுபவர்களாக திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர்களும் அம்பேத்கரின் கருத்துகளை உள்வாங்கியவர்களாகவும் மட்டுமே இருக்கிறார்கள். இவர்கள் பேசுவது

தொடர்ச்சி அடுத்த பக்கம்

## முன் பக்கத் தொடர்ச்சி

மட்டுமே ஒட்டுமொத்த இந்தியாவுக்குமான வழிகாட்டியாக இருக்கிறது. இந்தியா என்பது பார்ப்பனர்கள் உயர்வுக்காக உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு என்பதை உறுதிப்படுத்தும் வகையில் 2021இல் வெளியான ஒரு உதாரணம்தான் இந்த ஐஐடி ஐஐஎம் நிறுவனங்களில் இடஒதுக்கீடு பற்றிய செய்தியாகும். ஆகையால் பெரியார் அம்பேத்கரின் கொள்கைகளை உள்வாங்கியவர்களை, சமூகநீதிக்காகக் குரல் கொடுப்பவர்களைச் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்வு செய்து அனுப்புவதுதான் இதற்கானத் தீர்வாக இருக்கும்.

**மா.உதயகுமார்: 4. சமூகநீதியை நிலைநாட்டப் பாடுபடுவோர் தூக்கிப்பிடிக்கும் கட்சியாகத் திமுகழகம் இருப்பதற்கானக் காரணம்?**

**வெண்மணி:** சமூகத்தில் நலிந்து போயிருக்கும் அனைத்துப் பிரிவினரையும் முன்னேற்றும் ஆட்சியாக திமுகவின் ஆட்சிதான் இருந்திருக்கிறது. இன்றும் திமுகதான் இருக்கிறது. கலைஞருடைய தொலைநோக்குப் பார்வை வேறு யாருக்கும் இருந்ததாகத் தெரியவில்லை. பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மாணவர்கள், கிராமப்புற மாணவர்கள், ஏழை மாணவர்கள், தமிழ்வழியில் கல்வி பயின்றவர்கள், பெண்கள் எனப் பல்வேறு தரப்பினருக்கும் முன்னுரிமைகளைக் கொடுத்து அவர்களுக்குக் கல்வி சென்று சேர அவருடைய ஆட்சியில் பாடுபட்டிருக்கிறார். அனைத்துச் சமூகங்களிலும் கலைஞர் ஆட்சியால் பயன்பெற்ற முதல் தலைமுறைப் பட்டதாரிகள் பல இலட்சம் பேர் இருக்கிறார்கள். இதுபோன்ற சமூகநீதித் திட்டங்களைத் திமுகதான் கொண்டுவரமுடியும். கல்வி - வேலைவாய்ப்பு - அரசியல் உரிமைகள் ஆகிய சமூகத்தின் மூன்று அடிப்படைக் கூறுகளையும் அனைத்துத் தரப்பு சமூகத்தினருக்கும் கொண்டு சேர்த்தது திமுகதான். எனவே சமூகநீதியை உயர்த்திப்பிடிக்கிற சமூக ஜனநாயகத்தை ஏற்றுக்கொள்கிற அனைவரும் தூக்கிப்பிடிக்கும் கட்சியாக, திமுகழகம் இருக்கிறது ●

# வேட்பாளர்களுடன்...

### சைதாப்பேட்டை



### காஞ்சிபுரம் வடக்கு



### ஈரோடு மேற்கு



### மதுரை



### திண்டுக்கல்



### சென்னை எழும்பூர்



Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,